**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : STC No. 114/2024**
**Complainant Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Arumugam | | : |
| Father Name | : Guruvappan | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **30/06/2026**

## குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி (எதிரி தரப்பில்)

எதிரிக்கு வட்டிக்கு பணம் அளித்திருந்தேன். எதிரி ஒரு வருடத்தில் பணம் செலுத்துவதாக கூறி பணம் பெற்றார். எதிரியின் வீட்டில் அவரது மனைவி மற்றும் மகளுடன் வசித்து வருகிறார். அவர் குடும்பத்தாரும் எனக்கு நன்கு பரிட்சயம். ஒரு மாதத்திற்கு ரூ. 6500 வட்டி பெறுவேன். நான் தவனை முறையில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் இல்லை. நான் எதிரியிடம் சுமார் 20 முறைக்கு மேல் பணம் செலுத்தும்படி கேட்டுக்கொண்டேன். மேற் சொன்ன விவரங்கள் எதுவும் எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் பிரமாண வாக்குமூலம் தமிழில் உள்ளதால் எனக்கு படிக்க தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. மகளின் படிப்பு செலவிற்காக எதிரி என்னிடம் பணம் பெற்றார். கல்லூரி சேர்ப்பதற்காக பணம் பெற்றார். அந்த சமயத்தில் எதிரியின் மகள் கல்லூரி செல்லும் வயதில் இருந்தாரா கல்லூரியில் படித்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது.

எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன்பு எதிரியின் மனைவிக்கு ரூ. 2 லட்சம் கடனாக அளித்திருந்தேன். அந்த பணமும் வட்டிக்கு தான் கொடுத்தேன். குடும்ப செலவிற்காக பணம் பெற்றார். அந்த பணத்திற்கும் சரியான வட்டி செலுத்தவில்லை. அந்த கடனிற்கு இரண்டு மாதங்களுக்கு மட்டுமே வட்டி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் பணம்

செலுத்தவில்லை. ஏற்கனவே பணம் சரிவர செலுத்ததாத நபருக்கு மறுபடியும் கடன் ஏன் கொடுக்கப்பட்டது என்றால் அவர் வர்புறுத்தி பணத்தை கேட்டதால் அளித்தேன். பொதுவாக ஒரு நபருக்கு பணம் செலுத்தும்போது அவர் கடனை திருப்பி செலுத்தும்போது புத்தகத்தில் பதிவேடும் பழக்கம் உள்ளது. அந்த பழக்கம் எனக்கும் உள்ளது. இவ்வழக்கில் அந்த பரிவர்த்தனைகள் நான் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளேன். அந்த குறிப்பு புத்தகம் என் வசம் உள்ளது. அதை நீதிமன்றத்திற்கு தேவைப்பட்டால் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் காசோலையிலுள்ள தொகை அசல் மட்டும் தான் வட்டி இல்லை. வட்டி கேட்டு நான் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

எனது மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த பணத்தை தான் எதிரியிடம் கொடுத்தேன். எந்த தேதியில் பணம் அளிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும்.  9ம் மாதம் அளிக்கப்பட்டது தேதி தற்போது நியாபகமில்லை. புத்தகத்தை பார்த்தால் என்னால் தேதி குறிப்பிட்டு கூற முடியும்.

**(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**